# நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு.

முன்னிலை. திரு.S.R.பாபு B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 18–ம் நாள் வியாழன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.244/2025**

**CNR No–TNED 04–001826–2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் நிலையம். ஈரோடு குற்ற எண்.169/2024 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | காஜாமொய்தீன், த/பெ.முகமது இக்பால், 111–பூம்புகார் நகர், P.B.அக்ரஹாரம், ஈரோடு. |
| வனையப்பட்ட குற்றங்கள் | : | U/s. 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 18.06.2024 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 18.06.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | – |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | – |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 28.03.2025 |
| BNSS பிரிவு 263–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 30.07.2025 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 15.06.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 15.06.2026 |
| BNSS பிரிவு 348–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | : | Nil |
| BNSS .பிரிவு.351(1)(ஆ)–இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 18.06.2026 |



S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.18 16:59:18 +0530

| | | |
|---|---|---|
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | : | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | : | இல்லை |
| வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | : | 18.06.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 18.06.2026 |
| தீர்மானம் | : | எதிரி U/s. 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act ன் கீழ் குற்றவாளி. |
| முடிவு | : | இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,<br>எதிரிக்கு U/s 7(1)(a)(ii) of EC Act–ன் கீழான குற்றத்திற்கு இந்நீதிமன்றம் கலையும் வரை (Till the raising of the Court) சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.2000/– விதித்தும், அபராதம் கட்டடத்தவறினால் மேலும் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும், BNSS 271(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த வழக்கு 28.03.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக திரு.R.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.18 16:59:29 +0530

## தீர்ப்புரை

**குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

1. கடந்த 18.06.2024-ம் தேதி 15.30 மணிக்கு ஈரோடு மாவட்டத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு பொதுவிநியோகத்திட்ட அத்தியாவசிய பண்டங்களை கடத்துதல், பதுக்குதல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு கண்காணித்த போது, ஈரோடு அலகு சரகத்தில், நீதித்துறை நடுவர் எண்.3 எல்லைக்குட்பட்ட, ஈரோடு தாலுக்கா PS limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் காஜாமைதீன் என்பவர் தமிழக அரசால் தமிழக மக்களுக்காக ரேசன் கடைகள் மூலமாக வழங்கப்படும் பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசியை பொது மக்களிடமிருந்து சிறிது சிறிதாக குறைந்த விலைக்கு வாங்கி அதனை 55 கிலோ எடையுள்ள 03 மூட்டைகளில் ரூ.932/- மதிப்புள்ள மொத்தம் 165 கிலோ பொது விநியோகத்திட்ட புழுங்கல் அரிசியை கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு சட்ட விதிகளுக்கு புறம்பாக எவ்விதமான பில்லோ, அனுமதியோ, உரிமமோ இல்லாமல் பதுக்கி வைத்திருந்த குற்றமானது தமிழ்நாடு அட்டவணையிடப்பட்ட பண்டங்கள் (அட்டைகள் மூலம் விநியோகப்படுத்துதல்) ஆணையின் பிரிவு 6 (4) of TNSC (RDCS) Order 1982-யை மீறி செயலாற்றியுள்ள குற்றத்திற்காக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை உதவி ஆய்வாளர் அவர்கள் சட்டப்பிரிவு 7(1)(a)(ii) அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சட்டம் இனிமேல் U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act என்று அழைக்கப்படும்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து எதிரி மீது U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act-ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.18 16:59:32 +0530

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் BNSS பிரிவு 230-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act-ன் படியான குற்றச்சாட்டுக்கான முகாந்திரம் இருப்பது பற்றி BNSS பிரிவு 263-ன் கீழ் எதிரியிடம் U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act-படியான குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 1,3,4,5,6-ஐ விசாரிக்காமல் அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.

6. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சியங்களின் வாயிலாக புலப்படும் வாதத்தின் சுருக்கம்</u>

6.1)அ.சா.1 திரு.ராஜ்குமார், தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2024-ம் தேதி 15.30 மணிக்கு ஈரோடு தாலுக்கா PS Limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்த போது அந்த இடத்தில் சந்தேகப்படும் படி எதிரி 3 மூட்டையின் அருகில் நின்று கொண்டிருந்தார் என்றும், தங்களை கண்டதும் அந்த நபர் 03 மூட்டைகளையும் அந்த இடத்திலேயே விட்டு விட்டு தப்பித்து சென்று தலைமறைவாகிவிட்டார் என்றும், பின்னர் தப்பித்து சென்ற நபரைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரித்த போது அவர் பெயர் மற்றும் விலாசம் காஜாமொய்தீன் என்று தெரியவந்ததாகவும், அந்த இடத்தில் இருந்த 3 மூட்டைகளையும் சோதனை செய்து பார்த்த போது அவற்றில் தலா சுமார் 55 கிலோ வீதம் மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொதுவிநியோக திட்ட அரிசி இருந்தது



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.18 16:59:37 +0530

என்றும், மேலும் தப்பி ஓடிய நபர் காஜமொய்தீன் என்பவர் எவ்வித ஆவணங்கள் மற்றும் உரிமம் எதுவும் இல்லாமல் வைத்திருந்த தலா சுமார் 55 கிலோ எடையளவு கொண்ட 03 மூட்டைகளில் இருந்த மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொது விநியோக திட்ட அரிசியை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதுல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.1) தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 18.06.2024–ம் தேதி 16.30 மணிக்கு நிலையம் வந்து தலைமறைவு எதிரி காஜாமைதீன் என்பவர் மீது நிலைய குற்ற எண் : 169/2024 சட்டப்பிரிவு 6(4) Of TNSC(RDCS) Order 1982 r/w 7(1)a(ii) Of EC Act 1955 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 திரு.மூர்த்தி, தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2024–ம் தேதி15.30 மணிக்கு ஈரோடு தாலுக்கா PS Limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்து அந்த இடத்தில் சந்தேகப்படும் படி எதிரி மூன்று மூட்டையின் அருகில் நின்று கொண்டிருந்தவரை பிடிக்க முற்பட்ட போது அந்த நபர் தப்பிச்சென்று தலைமறைவாகிவிட்டார் என்றும், பின்னர் தப்பித்து சென்ற நபரைப்பற்றி விசாரித்த போது அவர் பெயர் மற்றும் விலாசம் காஜாமொய்தீன், த/பெ முகமது இக்பால் என்று தெரியவந்ததாகவும், அந்த இடத்தில் இருந்த 03 மூட்டைகளையும் சோதனை செய்தில் அவற்றில் தலா சுமார் 55 கிலோ வீதம் மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொதுவிநியோக திட்ட அரிசி இருந்தது. தலா சுமார் 55 கிலோ எடையளவு கொண்ட 03 மூட்டைகளில் இருந்த மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொது விநியோக திட்ட அரிசியை உடன் இருந்த போலீஸ் சாட்சிகளான முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் (அ.த.சா.ஆ.2) கைப்பற்றியதாகவும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 18.06.2024–ம் தேதி 16.30 மணிக்கு நிலையம் வந்து தலைமறைவு எதிரி காஜாமொய்தீன் என்பவர் மீது நிலைய குற்ற எண் : 169/2024 u/s 6(4) Of TNSC(RDCS) Order 1982 r/w 7(1)a(ii) Of EC Act 1955 ன் படி முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ.3) பதிவு செய்ததாகவும், கைப்பற்றிய


S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.18 16:59:42 +0530

அரிசியை சேனாதிபதிபாகையம் குடோனிற்கு அனுப்பி வைத்து அத்தாட்சி (அ.த.சா.ஆ.4) மற்றும் தரச்சான்று (அ.த.சா.ஆ.5) பெற்றதாகவும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவடைந்தது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை ஒப்புக்கொண்டு. எதிரி தம்மிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறியதால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 1,3,4,5,6–ஐ விசாரிக்காமல் அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:

10. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. இனி இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையானது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.18 16:59:46 +0530

என்பதே ஆகும்.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 சாட்சிகள் மூலமாகவும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக அ.சா.1–ம் மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

14. எதிரி மீதான U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act–ன் கீழான் குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 18.06.2024–ம் தேதி 15.30 மணிக்கு ஈரோடு மாவட்டத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு பொதுவிநியோகத்திட்ட அத்தியாவசிய பண்டங்களை கடத்துதல், பதுக்குதல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு கண்காணித்த போது, ஈரோடு அலகு சரகத்தில், நீதித்துறை நடுவர் எண்.3 எல்லைக்குட்பட்ட, ஈரோடு தாலுக்கா PS limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் காஜாமைதீன் என்பவர் தமிழக அரசால் தமிழக மக்களுக்காக ரேசன் கடைகள் மூலமாக வழங்கப்படும் பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசியை பொது மக்களிடமிருந்து சிறிது சிறிதாக குறைந்த விலைக்கு வாங்கி அதனை 55 கிலோ எடையுள்ள 03 மூட்டைகளில் ரூ.932/– மதிப்புள்ள மொத்தம் 165 கிலோ பொது விநியோகத்திட்ட புழுங்கல் அரிசியை கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு சட்ட விதிகளுக்கு புறம்பாக எவ்விதமான பில்லோ, அனுமதியோ, உரிமமோ இல்லாமல் பதுக்கி வைத்திருந்தார் என்பதேயாகும்.

15. எதிரி மீதான U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, இவ்வழக்கின் நேரடி சாட்சி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2–ன்



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.18 16:59:50 +0530

சாட்சியத்தை பரிசீலிக்கும் போது, அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2024–ம் தேதி 15.30 மணிக்கு ஈரோடு தாலுக்கா PS Limit மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்து அந்த இடத்தில் சந்தேகப்படும் படி எதிரி மூன்று மூட்டையின் அருகில் நின்று கொண்டிருந்தவரை பிடிக்க முற்பட்ட போது அந்த நபர் தப்பிச்சென்று தலைமறைவாகிவிட்டார் என்றும், பின்னர் தப்பித்து சென்ற நபரைப்பற்றி விசாரித்த போது அவர் பெயர் மற்றும் விலாசம் காஜாமொய்தீன், த/பெ முகமது இக்பால் என்று தெரியவந்ததாகவும், அந்த இடத்தில் இருந்த 03 மூட்டைகளையும் சோதனை செய்தில் அவற்றில் தலா சுமார் 55 கிலோ வீதம் மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொதுவிநியோக திட்ட அரிசி இருந்தது. தலா சுமார் 55 கிலோ எடையளவு கொண்ட 03 மூட்டைகளில் இருந்த மொத்தம் சுமார் 165 கிலோ தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படும் பொது விநியோக திட்ட அரிசியை உடன் இருந்த போலீஸ் சாட்சிகளான முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் காவலர்கள் வாசுதேவன் மற்றும் காவலர் ராஜ்குமார் (அ.சா.1) சாட்சி கையொப்பம் செய்ததகாவும், பின்பு நிலையம் ஆஜராகி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், கைப்பற்றிய அரிசியை சேனாதிபதிபாகையம் குடோனிற்கு அனுப்பி வைத்து அத்தாட்சி மற்றும் தரச்சான்று பெற்றதாகவும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கையை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2–ன் சாட்சியத்தை ஒற்றியே அ.சா.1–ம் சாட்சியமளித்துள்ளது தெரியவருகிறது.

16. மேற்படி அரசுத்தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய எதிரிதரப்பிற்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. மாறாக இவ்வழக்கு குற்றத்தை எதிரி தம்மிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்தும், ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் குறித்து நிரூபிக்கப்பட தேவையில்லை என்பதன் அடிப்படையிலும், எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் இவ்வழக்கில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.18 16:59:54 +0530

என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. இவ்வழக்கின் எதிரி U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act-ன் கீழ் குற்றவாளி என முடிவுசெய்யப்பட்டுள்ளதால், அவருக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து கேட்டபோது, எதிரி குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எதிரியின் குடும்ப சூழ்நிலை மற்றும் அவரது வயது கருத்தில் கொள்ளப்பட்டது. மேலும், 165 கிலோ பொது விநியோகத்திட்ட அரிசியானது எதிரியிடம் கைப்பற்றப்பட்டு அரசு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அரசு தரப்பு சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. எனவே, எதிரியின் குற்றச் செயலால் அரசுக்கு ஆதாய இழப்பு ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கலம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட U/s 6 (4) of TNSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,

> எதிரிக்கு U/s 7(1)(a)(ii) of EC Act-ன் கீழான குற்றத்திற்கு இந்நீதிமன்றம் கலையும் வரை (Till the raising of the Court) சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.2000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும், BNSS 271(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

19. எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில்



S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.18 16:59:59 +0530

அவையறியப் பகரப்பட்டது.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.18 17:00:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

| **இணைப்பு :** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சாட்சிகள் :–** | | |
| **அரசு தரப்பு சாட்சி எண்.** | **பெயர்** | **எவ்வகையான சாட்சி** |
| அ.சா.1 | திரு. ராஜ்குமார் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.2 | திரு. மூர்த்தி | புலன் விசாரணை அதிகாரி |

| **அரசு தரப்பு சான்றாவணங்கள்.** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்றாவணம் எண்.** | **எவ்வகை ஆவணம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
| அ.த.சா.ஆ.1 | 18.06.2024–ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.2 | 18.06.2024–ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.3 | 18.06.2024–ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.4 | 28.06.2024–ம் தேதியிட்ட அத்தாட்சி | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.5 | 01.07.2024–ம் தேதியிட்ட தரச்சான்றிதழ் | அ.சா.2 |

**அரசு தரப்பு சான்று பொருள்:–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :–** இல்லை

**குறிப்பு:–** 1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.18 17:00:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.